# அக்டோபர் – 14 – சனி

## புனித முதலாம் கலிஸ்தஸ்

### ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்: பூவுலகம் மகிழ்வதாக!
### திபா. 97:1

**முதல் வாசகம் : யோவேல் 4 : 12– 21**

ஆண்டவர் கூறுவது: ”வேற்றினத்தார் அனைவரும் கிளர்ந்தெழட்டும் கிளர்ந்தெழுந்து யொசபாத்து பள்ளத்தாக்கிற்கு வந்து சேரட்டும் ஏனெனில் சுற்றுப்புறத்து வேற்றினத்தார் அனைவர்க்கும் தீர்ப்பு வழங்க நான் அங்கே அமர்ந்திருப்பேன். அரிவாளை எடுத்து அறுங்கள், பயிர் முற்றிவிட்டது திராட்சைப் பழங்களை மிதித்துப் பிழியுங்கள். ஏனெனில் ஆலை நிரம்பித் தொட்டிகள் பொங்கி வழிகின்றன் அவர்கள் செய்த கொடுமை மிகப் பெரிது. திரள் திரளாய் மக்கட் கூட்டம் தீர்ப்பு வழங்கும் பள்ளத்தாக்கில் திரண்டிருக்கிறது. ஏனெனில், ஆண்டவரின் நாள் அப்பள்ளததாக்கை நெருங்கி வந்துவிட்டது. கதிரவனும் நிலவும் இருளடைகின்றன் விண்மீன்கள் ஒளியை இழக்கின்றன. சீயோனிலிருந்து ஆண்டவர் கர்ச்சனை செய்கின்றார் எருசலேமிலிருந்து அவர் முழங்குகின்றார் விண்ணும் மண்ணும் அதிர்கின்றன் ஆயினும் ஆண்டவரே தம் மக்களுக்குப் புகலிடம் இஸ்ரயேலருக்கு அரணும் அவரே. நானே உங்கள் கடவுளாகிய ஆண்டவர் என்றும், நான் என் திருமலையாகிய சீயோனில் குடியிருக்கிறேன் என்றும் அப்பொழுது நீங்கள் அறிவீர்கள் எருசலேம் தூயதாய் இருக்கும் அன்னியர் இனிமேல் அதைக் கடந்து செல்லமாட்டார்கள். அந்நாளில் மலைகள் இனிய, புது இரசத்தைப் பொழியும் குன்றுகளிலிருந்து பால் வழிந்தோடும் யூதாவின் நீரோடைகளிலெல்லாம் தண்ணீர் நிரம்பி வழியும் ஆண்டவரின் இல்லத்தி லிருந்து நீரூயற்று ஒன்று கிளம்பும் அது சித்திமிலுள்ள ஓடைகளில் பாய்ந்தோடும். எகிப்து பாழ்நிலமாகும் ஏதோம் பாழடைந்து பாலைநிலம் ஆகும் ஏனெனில், அவர்கள் யூதாவின் மக்களைக் கொடுமைக்கு உள்ளாக்கினார்கள் அவர்களின் நாட்டிலேயே குற்றமற்ற இரத்தத்தைச் சிந்தினார்கள். யூதாவோ என்றென்றும் மக்கள் குடியிருக்கும் இடமாயிருக்கும் எருசலேமில் எல்லாத் தலைமுறைக்கும் மக்கள் குடியிருப்பார்கள். சிந்தப்பட்ட இரத்தத்திற்கு நான் பழிவாங்கவே செய்வேன் குற்றவாளிகளைத் தண்டியாமல் விடேன் ஆண்டவராகிய நான் சீயோனில் குடியிருப்பேன்.

**பதில்பாடல் :** நேர்மையாளர்களே ஆண்டவரில் களி கூருங்கள்

**நற்செய்தி : லூக்கா 11 : 27 - 28**

அக்காலத்தில் இயேசு மக்களோ: பேசிக் கொண்டிருந்தபோது, கூட்டத்திலிருந்து பெண் ஒருவர், ”உம்மைக் கருத்தாங்கிப் பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறுபெற்றவர்” என்று குரலெழுப்பிக் கூறினார்.அவரோ, ”இறைவார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர்” என்றார்.

**தியானம்:** இன்றைய தியானம் இறை சன்னிதானத்தில் நாங்கள் பேறுபெற்றவர்களாக உள்ளோமா? என்பதையும் அவ்வாறு இல்லாவிடின் அதற்காக நாங்கள் என்ன செய்யய வேண்டும் என்பதை தியானிக்க அழைத்து நிற்கின்றது. இன்றைய வாசகத்தில் அன்னை பேறுபெற்றவள் என்பதை அங்கிருந்த பெண் ஒருவர் இயேசுவிடம் கூறுகின்றார். “உம்மைக் கருத்தாங்கி பாலூட்டிய தாய் பேறுபெற்றவள்’’ (லூர்க.11:28). அதற்கு பதிலாக இறைவார்தையை கேட்டு அதன்படி நடப்பவா் அனைவரும் பேறுபெற்றவர்களே என்று இயேசு கூறுகின்றார். காரணம் அன்று அன்னை மரியாளும் கூட இறைவார்த்தையை வாசித்து தியானித்து அதன்படி வாழ்ந்தாள், தன்னைத் தாழ்த்தி இறைவனின் சித்தத்திற்கு பணிந்தாள், உலகத்திற்கே தாயனாள். இன்று நாங்களும் இவ்வாறாக இறைவார்த்தையை வாசித்து அதன்படி வாழ்ந்தோமேயானால் பேறுபெற்றவர்களாவோம். ஆனால் நாங்கள் இன்று இறைவார்த்தையைப்பற்றி, விசவாசத்தில் தளர்வுற்றவர்களாக ஏற்க மறக்கும் ஒருசிலா் ஒருபக்கம், வாசிக்காது நடப்பது நடக்கட்டும் என்று வாழ்பவர்கள் மறுபுறம். அவ்வாறு வாழ்ந்தால் எவ்வாறு பேறு பெற்றவர்களாக இறையாசீரைப் பெற்றுக்கொள்வோம். காரணம் இவ் இறைவார்த்தையில் இறைமகன் இயேசு மனுவுருவாகி வாசமாயிருக்கின்றார் என்பதை மறந்து பாவ வாழ்வு வாழ்வதே. இறைவார்த்தையின்படி நாங்கள் வாழ்வோமேயானால் எமது வாழ்க்கை முறையானது மாற்றமடையும். அன்பு, தாழ்ச்சி, பகிர்வு இவைபோன்ற நற்குணங்கள் எம்மத்தியில் காணைப்படும். ஆதிக்கிறிஸ்தவர்களும் கூட அப்பம் பிட்குதலிலும், நட்புடன் உறவாடுவதிலும், செபிப்பதிலும், இறைவார்த்தையை வாசிப்பதிலும் நிலையாய் இருந்தார்கள் அதனால் இறைவன் முன்னிலையில் பேறுபெற்றவர்களாக கருதப்பட்டார்கள் எனவே இன்று நாங்களும் இறைவார்த்தையை வாசித்து, அதைனைத் தியானித்து அதன்படி நடந்தோமேயாயின் இறைவன் சந்நிதியியில் பேறு பெற்றவர்களாவோம். எனவே இறைவார்த்தையை வாசித்து அதை ஏற்றுக்கொள்ள தடையாய் உள்ள அனைத்து பாவ பழக்கவழக்கங்களை விட்டவிட்டு தூய வாழ்வு வாழ்வோம்.